செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 463 நாள் : 4/8/17

# பத்திரிக்கைச் செய்தி

**சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் (தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான) கல்வி உதவித்தொகை திட்டங்களில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க 31.08.2017 வரை கால நீட்டிப்பு**

தமிழ்நாட்டில் மைய அரசால் அறிவிக்கப்பட்ட சிறுபான்மையினரான இஸ்லாமியர், கிருத்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தைச் சார்ந்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளிமேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான தொழிற்கல்வி படிப்புக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களில் (புதுப்பித்தல்) ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க ஏற்கனவே 31.07.2017 வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது மேற்படி கல்வி உதவித்தொகை திட்டங்களில் புதுப்பித்தல் இனங்களில் சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க 31.07.2017-லிருந்து 31.08.2016 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினத்தைச் சார்ந்த தகுதியுள்ள அனைத்து மாணவ / மாணவியரும் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் முலமாக கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஓம்/- சி.அ. ராமன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

//உத்திரவுப்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்.

4/8/17

4.8.17.